# பழங்கால இலக்கியங்களில் தமிழர்களின் வாழ்வியல் அறங்கள்

# Ethical Values in the Life of Ancient Tamils in Classical Literature

***முனைவர் மு. நிசாந்த்***
உதவி பேராசிரியர்
மதுரை சமூக அறிவியல் கல்லூரி
மதுரை, இந்தியா

**Dr. M. Nisanth**
*Assistant Professor*
*Madurai Institute of Social Sciences*
*Madurai, India*

**Citation**: Nisanth, M. "Ethical Values in the Life of Ancient Tamils in Classical Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 16-21.

## ஆய்வுச் சுருக்கம்

*வாழ்வியலில் "அறம்" என்பது நமது வாழ்க்கையின் அடிப்படைகளை, நெறிமுறைகளை, மற்றும் நலநிலை உறுதி செய்யும் முறைப்பாடுகளை குறிக்கிறது. இது தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கையின் ஒழுக்கத்தை, நீதியை, மற்றும் நல்வழிகளைப் பொருத்துகிறது. தமிழர்களின் வாழ்வியல் என்பது சமூகப் பொருள் உற்பத்தியை அடித்தளமாக கொண்டுள்ள பண்பாட்டுக் கூறுகளில் முதன்மையானது. இவ்வாழ்வியலானது குடும்பம், திருமணம், அறம், கல்வி, கலை, காதல் தத்துவம் மற்றும் அறிவியல் போன்ற சமூகளாவிய நிறுவனங்களை கட்டமைத்துள்ளது. இத்தகைய வாழ்வியல் கட்டமைப்பை பிரதிபலிப்பாக தமிழர்தம் மொழியும் இலக்கியமும் வினையாற்றுகின்றது தமிழ்குடி, குறிக்கோள் பலவற்றை கொண்ட குடி, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்க்கை வளமும் இலக்கியச் செறிவும் கொண்ட தமிழர்கள், எடுத்துக்காட்டான குறிக்கோள் நெறியை கொண்டு குவலயம் புகழ வாழ்ந்தார்கள். என்பதனை தமிழ் இலக்கியத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது தம்மிடம் வந்து இரந்த எளிய மக்களுக்கு இல்லை என்று கூறும் அவ சொல்லை கூறுவதை தாழ்வாக கருதினர்கள். தமிழர்கள். பிறருக்கு உதவுதல் என்பதை சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் உதவியாண்மை என்று குறிப்பிடுகிறார். தன்னை தாண்டி பிறரை பற்றி சிந்திக்கும் போது இருக்கும் நிலையை ஓதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணருகின்றான் எனலாம்.*

*தமிழர்கள் வாழ்க்கை முறையினை தங்களது வாழும் சூழலுக்கு ஏற்ப நிலத்தினை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என ஐந்தாக பிரித்து தங்கள் வாழ்வியலாக எந்த நிலையிலும் கடைபிடித்து தொழுகியது வாய்மை, செய்நன்றி அறிதல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, ஈகை, விருந்தோம்பல் மற்றும் இல்லற மாண்பு போன்ற அறம் சார்ந்த நெறிகளில் இருந்து தங்கள் வாழ்வு வழுவிச் செல்லாமல் வாழ்ந்தனர் என்பதனை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். அது ஒரு வரையறைக்குள் வாழ்வியலை கொண்டிருந்தது அங்கு பண்பாடுகள் மற்றும் அறநெறிகள் பாதுகாக்கப்பட்டன, போற்றப்பட்டன.*

***முக்கிய சொற்கள்:*** *வாழ்வியல், அறங்கள், பண்பாடு, வாய்மை, செய்நன்றி அறிதல்,, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, இல்லற மாண்பு*

## Abstract

*In life, "Aram" (virtue) signifies the fundamental principles, ethical norms, and structured guidelines that ensure well-being. It encompasses morality, justice, and righteous conduct in both personal and social life. The lifestyle of Tamils is deeply rooted in socio-economic production and is a fundamental aspect of their cultural framework. This way of life has shaped essential social institutions such as family, marriage, virtue, education, art, the philosophy of love, and science. The Tamil language and literature serve as reflections of this cultural structure. The Tamil society, with its diverse goals, flourished two thousand years ago, displaying literary richness and a well-defined ethical framework. The literary heritage of the Tamils reveals*

*that they lived with exemplary moral values, bringing glory to the world. They considered it dishonorable to refuse alms to those who came to them seeking help. Sangam literature highlights charity as a supreme virtue, as expressed in the words of poet Ezathu Bhoothan Devanar: "Uthavi Aaanmai" (Generosity is the greatest virtue). When an individual extends their thoughts beyond themselves and considers others, they come to realize their rightful place in society. The Tamil way of life was closely linked to their natural surroundings, categorizing land into five divisions - Kurunji (mountainous regions), Mullai (forests), Marutham (agricultural lands), Neithal (coastal areas), and Paalai (deserted lands). Regardless of their geographical setting, Tamils adhered to virtuous principles such as truthfulness, gratitude, self-restraint, discipline, charity, hospitality, and the dignity of household life. Sangam literature provides profound insights into how the Tamils maintained these ethical values without deviation. Their way of life was structured within a defined framework where customs and moral values were protected and revered.*

***Keywords**: Lifestyle, Virtues, Culture, Truthfulness, Gratitude, Self-restraint, Discipline, Household Dignity.*

**வாய்மை**

*வாய்மைச் சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்று கருத்தை*

***பொய்யாச் செந்நா பொய் படுறியா வயங்கு***

*செந்நா என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஒரு அதிசயத் திறவுகோல் என்பார்கள் இன்பத்தின் கதவை திறப்பதும் அதுதான் அதுபோல துன்பத்தின் கதவை திறப்பதும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசினால் மனிதனை தாழ்த்துகிறது. பழங்காலத்தில் தமிழர்கள் வாக்கு கொடுத்தால் அந்த வாக்கை நிறைவேற்றுவார்கள். ஆகையால் தமிழர்கள் மெய் பேசும் வழக்கத்தை கொண்டிருந்தார்கள்.*

**விருந்தோம்பல்**

*விருந்தோம்பல் என்பது சிறந்த பண்புகளுள் ஒன்றாக கருதப்படுகிறது நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு தமிழருக்கு உண்டு இதை அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் என்று நற்றிணை (142) குறிப்பிடுகிறது*

*தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை*

***உண்டால் அம்மா. இவ்வுலகம் இந்திரர்***
***அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்***
***தமியர் உண்டாலும் இலரே (புறநானூறு- 182)***

*என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.*

*தமிழர்களின் இன்னும் சொல்லப் போனால் இந்திய மண்ணின் தலையாய மிகச் சிறந்த குணம் வீட்டிற்கு வந்த விருந்தினை மனம் கோணாமல் உபசரித்து வழியனுப்புவது. இதுவே தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு ஆகும்*

**இன்னாசெய்யாமை**

*ஒருவன் தான் செய்த பாவ புண்ணியங்களின் பலன்களை அனுபவிக்கவேண்டும் என்றும் ஒருவருக்குத் முற்பகலில் தீங்கு செய்தால் பிற்பகலிலேயே அத் தீங்கை அனுபவிக்க நேரும் என்ற நீதியையும் வலியுறுத்துகிறார் திருவள்ளுவர்*

***பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா***
***பிற்பகல் தாமே வரும் (குறள் 319)***

*ஒருவன் தனக்கு இன்னா செய்யும் போது திரும்பி 'ஸ்ரீடிஸ்ரீ நூணிணூ ணுச்ணு" என்று பழிக்கு பழி வாங்காமல் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்ற பைபிளின் பண்பைப் போல தீமை செய்தவன் நாணும் விதமாக நன்மை செய்து விடவேண்டும் என்பதனை கீழ்க்கண்ட குறள் மூலம் விளக்குகிறார்*

***இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண***
***நன்னயம் செய்து விடல் (குறள் 314).***

**நன்றி மறவாமை**

*சமகால சூழலில், நிதி மூலதன பிரிவின் வெளிப்பாடாகிய உலகமயமாதலால் உலகம் சுருங்கியது போல மனிதனின் மனமும் சுருங்கிவிட்டது. சகமனிதருடன் எவ்வகையான உறவும் இன்றி மாடமாளிகைகளாகக் கட்டப்பட்ட ப்ளாட்டுகளில் மனிதன் தனித்து விடப்பட்டான் என்பதும் உண்மைதான். கூட்டமாக வாழ்கிறார்கள் ஆனால் ஒவ்வொருவரும் தனி தீவாகவே ஒற்றுமையின்றி இருக்கிறார்கள் தனியான மனிதனிடம், இயல்பாக இருக்கவேண்டிய மனிதநேயமே இல்லாமல் போன பிறகு செய்நன்றி போன்றறவற்றைப் பற்றி யோசிக்க மனிதனுக்கு நேரம் எங்கே இருக்கிறது? ஆனாலும் உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவி கடுகளவே யானாலும் மறந்து விடாமல் நன்றியுடன் இருக்கவேண்டும் என்ற வாழ்வியல் கோட்பாட்டைக் கீழ்கண்ட குறள் மூலம் விளக்குகிறார்*

***தினைத்துணை நன்றிசெயினும் பனைத் துணையாகக்***
***கொள்வர் பயன் தெரிவர் (குறள் 104)***

*இந்தக் குறளின் படி தான் பழங்கால தமிழர்கள் நன்றி மறவாமல் அறநிலை வாழ்வியல் கோட்பாட்டைபின்பற்றி வாழ்ந்தார்கள் ஆனால் சமகால பண்பாட்டு சீரழிவானது மனிதர்களை சுயநல வெறி சிந்தனைக்கு ஆட்படுத்திவிட்டது.*

**இல்லற மாண்பு**

*இல்லற மாண்பு என்பது இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவி பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு சொத்து சேர்ப்பது இல்லற மாண்பாகாது, மாறாக பிள்ளைகளை சமூக பொறுப்புணர்வு உள்ளவர்களாகவும் பிறருக்கு உதவி செய்யக்கூடிய மனப்பான்மை உள்ளவர்களாகவும் வளர்ப்பதும்தான் இல்லறம் மாண்பாக கருதப்படுகிறது.*

*சங்க இலக்கியம், தமிழர்களின் பழங்கால வாழ்வியல், காதல், பிரிவு, இல்லறம் போன்ற பல்வேறு அம்சங்களை விளக்கி நிற்கிறது. குறிப்பாக, இல்லற வாழ்க்கையின் அழகு, பொறுப்பு, கடமைகள் போன்றவற்றை மிகவும் உணர்வுபூர்வமாகவும், கவித்துவமாகவும் பாடியுள்ளனர். அதே போல அகநானூறு நூல் முழுக்கவே தலைவன், தலைவி இடையிலான காதல், பிரிவு, இணைவு போன்ற இல்லற வாழ்க்கையை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது. இதில், தலைவன் தலைவியைப் பிரிந்து வருந்தும்போது, தலைவி தன் கணவனை எவ்வளவு நேசிக்கிறாள் என்பதை வெளிப்படுத்தும் பாடல்கள் பல உள்ளன. பழங்காலத்தில் தமிழர்கள் வீடுகள் கட்டும்போது வீட்டிற்கு வெளியே வாசலின் அருகே திண்ணை அமைத்து கட்டுவார்கள் ஏனென்றால் வழி போக்கர்கள் வீட்டு வழியா செல்லும்போது ஓய்வெடுத்து செல்வதற்காக. அப்படி ஒரு வழக்கம் பழங்கால தமிழர்களிடையே இருந்தது. இவ்வழக்கத்தினை இல்லற மாண்பாக கருதப்பட்டது.*

**ஒழுக்கம் உடைமை**

*சங்க இலக்கியம், தனிமனித ஒழுக்கம் முதல் சமூக ஒழுக்கம் வரை பல்வேறு பரிமாணங்களில் ஒழுக்கத்தைப் பற்றி பேசுகிறது. என்பதை பல பாடல்கள் வலியுறுத்துகின்றன.*

***"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்***
***உயிரினும் ஓம்பப் படும்." - திருக்குறள்***

*(ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.)*

***"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்***
***இழிந்த பிறப்பாய் விடும்." - திருக்குறள்***

*(ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும்; ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகி விடும்.)*

*ஒழுக்கம் இல்லாவிட்டால் குடிமை இழிந்து விடும்: ஒழுக்கம் இல்லாவிட்டால், எவ்வளவு உயர்ந்த குலத்தில் பிறந்தாலும் இழிந்த நிலைக்குச் சென்றுவிடுவோம் என்கின்றன. சங்க இலக்கிய பாடங்களின் மூலம் தமிழர்களின் ஒழுக்க நெறிகளை அறிய முடிகிறது*

**ஈகை பண்பு**

***செல்வத்துப் பயனே ஈதல்***
***துய்ப்பேம் எனினே தப்பனந பலவே (புறம் 189; 7-8)***

*என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது பழந்தமிழர் கொலைமாற்றியை புலப்படுகிறது*

*புற இலக்கியங்களில் மட்டுமின்றி அக இலக்கியங்களும் ஈதல் பற்றி செய்திகள் இடம் பெற்றுள்ளன இழிவு பிறப்போர்க்கு இயாது வாழ்தலை விட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.*

*வள்ளல்கள் மட்டுமின்றி புலவர்களும் ஈர்ந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது தான் பெற்றதை பிறருக்கு வழங்கும் பெருஞ் சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.*

***பிறர் நோயும் தம் நோய் போல் போற்றி அறன்அறிதல்***
***சான்றவர்ந்தவர்க்கு எல்லாம் கடன் (கலி 139)***

*என்று பிறர் துன்பத்தை தம் துன்பமாக கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.*

*நம் வாழ்க்கையின் குறிக்கோள் பிறருக்கு உதவுவதாகவே அமைய வேண்டும் அதுதான் சான்றோர் பண்பு கண்ட நெறி அவ்வாறு ஒருவேளை உதவ முடியாமல் போனாலும் பிறருக்கு தீங்காவது செய்யாமல் இருத்தலே சிறப்பாகும் அதுவே நல்ல கதிக்கு அழைத்துச் செல்லும் பாங்குடையதாகும் இவ்வாறு பேசுபவர் நரிரவரூஉத்தலையார் என்னும் சங்க சான்றோர் ஆவர்*

***நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின்/ அதுதான்***
***எல்லோரும் உவப்பது அன்றியும்***
***நல்லாற்றுப் படும்உம் நெறியும் ஆர் அதுவே - (புறநானூறு 195)***

*இடும்பையால் இன்மையுரைத்தார்க்கு அது நிறைக்கலாற்றாக்கால் தன் மெய் துறப்பன் மலை என்னும் கலித்தொகை அடிகள் தன்னிடம் இரந்தவர்க்கு ஈய இயலாத போது சாத லே இனிது என்று உரைக்கின்றது.*

*ஒருவன் துன்பத்தில் ஒருவன் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும்போது உதவி கேட்கிறான் என்றால் கண்டிப்பாக அவனுக்கு உதவி செய்ய வேண்டும் அப்படி செய்யவில்லை என்றால் நீ இறந்து போவதே மேல் என்று கலித்தொகை அடிகள் கூறுகிறது, இயலாதவருக்கு உதவி செய்ய வேண்டும், மனிதர்கள் அறநெறியோடு வாழ வேண்டும் என்பதனை தமிழ் இலக்கியங்கள் எடுத்துக்காட்டியது போல தமிழர்களின் வாழ்வியல் முறைகள் அமைந்திருந்தது.*

**முடிவுரை**

*சங்க இலக்கியங்களில் அறம் என்று பார்த்தோமானால் சங்க வாழ்க்கையில் எது உயர்வான பண்பாடு அதுவே அறமாக பார்க்கப்பட்டது. அகம் சார்ந்த வாழ்க்கை காதலைப் பற்றியும் புறம் சார்ந்த வாழ்க்கை வீரத்தை பற்றியும் பேசக் கூடியது வீரம் என்பது போர்க்களத்தில் பகைவருடன் போரிடும்போது புறமுதுகு காட்டி ஓடக்கூடாது, எதிரியை ஜெயிக்க வேண்டும் இல்லையென்றால் எதிரியை நேருக்கு நேராக எதிர்த்து நெஞ்சில் குத்து வாங்கி சாக வேண்டும் அதுதான் அறம். என்று தமிழர்கள் கருதினார்கள். ஆனால் சமகால சூழலில் தமிழர்களிடையே அறம் காக்கப்படுகின்றதா என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாகதான் உள்ளது. ஏனென்றால் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பம், இன்றைய சமூக சூழல், அரசியல், பண்பாடு வாழ்வியல் சூழல் மற்றும் சமூக மதிப்பீடு போன்றவைகள் அறக்கோட்பாட்டின் மீது தீவிரமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. இதனால், சமகாலத்தில் வாழக்கூடிய தமிழர்கள், தான் வாழ என்ன வேணாலும் பண்ணலாம். எப்படி வேணாலும் பணம் சம்பாதிக்கலாம் என்ற சுயநல வெறி சூழலுக்கு ஆட்ப்பட்டு விட்டான்,*

*சமூகப் பொருள் உற்பத்தியில் லாப நோக்கத்தோடு செயல்படுகின்ற நிறுவனங்களின் இன்றைய நடைமுறையானது இயற்கையின் மீது பகை முரணாக அமைகிறது. மனித இயற்கையானது திட்டமிடப்படாத இயற்கை சூழல்களில் திட்டமிட்ட மாற்றங்களை நிகழ்த்துவதாகும். இத்தகைய மாற்றங்கள் இயற்கை மீதான நட்பு முரணாகவே கட்டமைந்து வந்திருந்தன. இந்த மனிதர்களின் உலகம் மனிதர்களுக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது என்ற உண்மையை ஒப்புக் கொள்வது தான் அறம் ஆகும். இந்த உயிரினங்களில் வாழக்கூடிய உலகத்தின் மனிதர்கள் அங்கமாக இருக்கக்கூடிய லாபவெறி பிடித்த நிறுவனங்களின் லாபவெறிக்கு பலியாக கூடிய சூழலுக்கு எதிராக இந்த சூழலை நேருக்கு நேர் எதிர்த்து செல்வது இந்த காலகட்டத்தில் அறமாக இருக்கிறது. சங்ககால தமிழர்களின் வாழ்வியல் அறங்கள், நமக்குப் பல பாடங்களை கற்றுத் தருகின்றன. அறம், உலக நல்லிணக்கத்திற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் வழிவகுத்தது. இந்த அறங்களை நம் வாழ்வில் பின்பற்றுவதன் மூலம், நாம் ஒரு சிறந்த குடிமகனாகவும், நல்ல மனிதனாகவும் வாழலாம்.*

**துணை நின்ற நூல்கள்**

1. *ராதாகிருஷ்ணன், இரா. நீதி நூல்கள் ஏழு தெளிவுரை, கவிஞர் - சிவகுரு பதிப்பகம், 2021.*
2. *நிசாந்த், மு. இலக்கியம் காட்டும் அறநெறிகள், கீற்று: சமூக அரசியல் இணைய இதழ், 2024.*

3. பாலசுப்பிரமணியன், சி. வாழ்வியல் நெறிகள், நறுமலர் பதிப்பகம், 1990.
4. சிவக்குமார், கே. இலக்கிய அறிவியல், அமேசான், 2021
5. பத்தாம் வகுப்பு - தமிழ் உரைநடை - சங்க இலக்கியத்தில் அறம், தமிழ் அரசு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 2019, 184-187.
6. நிசாந்த், மு. சமகால சூழலில் தனிமனித அறத்தின் சமூக நிலைப்பாடு, கீற்று: சமூக அரசியல் இணைய இதழ், 2025.
7. சிவக்குமார், கே. தமிழுக்கு பேர் அறிவா? அழகா?, சமூக அரசியல் இணைய இதழ், 2024.

**References**

1. Radhakrishnan, R. *Seven Ethical Texts: An Exegesis*. Poet-Sivaguru Publications, 2021.
2. Nishanth, M. "Moral Principles as Depicted in Literature." *Keetru: Socio-Political Online Journal*, 2024.
3. Balasubramanian, C. *Principles of Life*. Narumalar Publications, 1990.
4. Sivakumar, K. *Literary Science*. Amazon, 2021.
5. *Tenth Standard - Tamil Prose - Ethics in Sangam Literature*. Tamil Nadu Textbook and Educational Services Corporation, 2019, 184-187.
6. Nishanth, M. "The Social Position of Individual Ethics in the Contemporary Context." *Keetru: Socio-Political Online Journal*, 2025.
7. Sivakumar, K. "Is Tamil Known for Knowledge or Beauty?" *Socio-Political Online Journal*, 2024.